**கவனிக்க.-** *2023.11.03 ஆந் திகதிய 2357 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III (தமிழ் மொழி மூலம்) பிரசுரிக்கப் படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2358 - 2023 නොවැම්බර් මස 10 වැනි සිකුරාදා - 2023.11.10**

*2358 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | 506 |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 508 |


**கவனிக்க.-** என் கனவு யாழ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2023, ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது. .

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2023, திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

கிழக்கு மாகாண சபையின் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள கந்தளாய் காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாணங்களுக்கு இடைப்பட்ட) என். வில்வரத்னம் ஆகிய நான் அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி 1996.08.14 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள திரு/கன்/பிர 4442 ஆம் இலக்க அளிப்பு பத்திரத்தின் உரிமையாளரான கந்தளாய் வீர இல. 11 எனும் முகவரியில் வசிக்கும் உடகே ஆராச்சியின் ரோபின்னோனா என்பவருக்கு கையளிக்கப்பட்டு திருகோணமலை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 1999.10.22 ஆந் திகதி லட/கவு/36/81 ஆம் பதிவேட்டின் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்பவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திதைத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் படி கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 01.12.2023 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்திலான சமர்ப்பணம் மூலம் எனக்கு தெரிவிக்க வேண்டும்.

**மேற்கூறிய அட்டவணை**

திருகோணமலை நிர்வாக மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவின் மாகம் பற்றில்/கோறளையிலுள்ள வான்அல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அம்பாந்தோட்டை எனும் கிராமத்தில் அமைந்துள்ள குடாகம் 06 என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளது, நில அளவையாளர் நாயகத்தினால்............ ஆம் இலக்க வெளிக்களத் தாளில்/நில அளவையாளர் நாயகத்தினால் என்பவரினால்......................... ஆம் இலக்க துண்டு வரைபடத்தில் .............................. என்பவரினால் தயாரிக்கப்பட்ட பட 02 ரேகை வரைதலில் 4720 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் 0.413 ஹெக்டெயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டு உள்ளதுமான அரச காணித்துண்டு:

**காணியின் பெயர் பதளவலதெனிய**:

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 4970;
கிழக்கு : லாட் இடைக்கால பற்று இல்லை;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 4965;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 4972.

என். வில்வரத்னம்,
காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட)
உதவிக் காணி ஆணையாளர் அலுவலகம்,
கந்தளாய்.

2023, யூலை 20.

11 - 190

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

கிழக்கு மாகாண சபையின் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள கந்தளாய் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர் (மாணங்களுக்கு இடைப்பட்ட) என். வில்வரத்னம் ஆகிய நான் அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி 1996.08.04 ஆந் திகதி திரி. கன். கே. 8819 ஆம் இலக்க அளிப்பு பத்திரத்தின் உரிமையாளரான கந்தளாய் வீர இல. 11 வான் எல, கந்தளாய் எனும் முகவரியில் வசிக்கும் உடகே ஆராச்சியின் ரோபின்னோனா என்பவருக்கு கையளிக்கப்பட்டு திருகோணமலை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் LDO KA/63/107 ஆம் பதிவேட்டின் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்க்குச், சட்டரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்பவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 01.12.2023 க்கு முன்னர் எழுத்திலான சமர்ப்பணம் மூலம் எனக்கு தெரிவிக்க வேண்டும்.

### முதலாவது அட்டவணை

திருகோணமலை நிர்வாக மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவின் கந்தளாய் பற்றில்/கோறளையிலுள்ள ஜயன்திபுர கிராம அலுவலரின் பகுதியில் உள்ள வான் எல கிராமத்தில் அமைந்துள்ளது திருகோணமலை நில அளவை அதிகாரி என அழைக்கப்படுவதும், நில அளவையாளர் தலைமை அதிபதி அவர்களால் தயாரிக்கப்பட்டு .............................. என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள 121 ஆம் இலக்க களத்தாளில் ................ ஆம் இலக்க வரைபடத்தில் அவர்களால் தயாரிக்கப்பட்ட எப். எம். பீ. 02 இன்செட் 134 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் ................... அவர்களால் தயாரிக்கப்பட்ட ஆம் இலக்க உருவப்படத்தில் 4720 ஆம் இலக்க காணித்துண்டு எனக் குறிப்பிடப்படுவதும் 1.0484 ஹெக்டயார் பரப்பளவுள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு:

காணியின் பெயர் : பதளவலதெனிய -
வடக்கு : காணித்துண்டு இலக்கம் 4728 மற்றும் 4719;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 4719 மற்றும் 4731;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 4731 மற்றும் 4721;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 4727 மற்றும் 4728.

என். வில்வரத்னம்,
காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட)
உதவிக் காணி ஆணையாளர் அலுவலகம்,
கந்தளாய்.

2023, யூலை 20.

11 - 191

# நானாவித காணி அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/25940.
பிரதேச செயலாளரின் இலக்கம்.: BD/HE/LND/7/9 -2.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

பதுளை மாவட்டம், ஹாலிஎல பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 85, பத்தேகம கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த பத்தேகம கணுமுல்தன்ன கிராமத்தின் F. V. P. 182 இனது, காணித் துண்டு இலக்கம் 208 இனது பகுதியின் மூலம் காட்டப்படுகின்ற நில வரைபடத்தின் காணித் துண்டு இலக்கம் 01 இன் மூலம் காட்டப்பட்டுள்ள 20 பேர்ச் அளவுடைய அரச காணியினை வீடமைப்பு நடவடிக்கைகளின் பொருட்டு திரு. விஜேகோன் முதியான்சேலாகே மஹிந்தரத்ன என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : அரச காணி:

கிழக்கு : எஸ். எம். குணசேகர என்பவருக்குச் சொந்தமான இடம்;

தெற்கு : பாதை ஒதுக்கம்;

மேற்கு : அரச காணி.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசின் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 ஆந் திகதியிலிருந்து 2025.06.14 ஆம் திகதி வரை)

**வருடாந்த குத்தகை**.- பிரதான மதிப்பீட்டாள ரின் அடிப்படையில் 1995 ஆம் வருடத்தின் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% ஆகும்.

**தவணைக் கட்டணம்** : இடத்தினது அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% இன் மூன்று மடங்கு ஆகும்.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர்/ உதவிக் காணி ஆணைாளர் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வீடமைப்பு நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர் /உதவிக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) கட்டப்பட்டுள்ள/ கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்ற கட்டடங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள நிலையில் பேணப்பட வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தைகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 1995.06.15 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதி வழங்கக் கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வி. ஏ. டி. இஷார எம் சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, ஒற்றோபர் 13.

11 - 154

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/72445.
காணி ஆணையாளரின் இலக்கம்.: HDLC/03/46/06/13.

### 21 (2) இன் அரச காணி ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவில் இஹல கும்புக்வெவ கிராம அலுவலர் பிரிவில் இஹல கும்புக்வெவ கிராமத்தில், வரைபட இலக்கம் 0187 இல் காணித்துண்டு இலக்கம் 1, 2 மற்றும் 3 மூலம் சுட்டிக்காட்டப்படுகின்ற அளவில் 20 ஏக்கர்கள் அளவிலான அரச காணிப் பகுதி வணிக நடவடிக்கைகளுக்காக டீ. பி. எல். அக்ரோ என்டர்ப்பரைசஸ் என்னும் பெயரில் குத்தகைக்கு கோரியுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. விண்ணப்பிக்கின்ற காணி எல்லை கீழே சுட்டிக்காட்டப் படுகின்றது:

வடக்கு : அரச காணி:
கிழக்கு : அரச காணி;
தெற்கு : அரச காணி;
மேற்கு : அரச காணி.

03. விண்ணப்பிக்கின்ற காணிக்கு உரிய குத்தகையை வழங்க முடியும். ஆதலால் அரசின் ஏனைய நியமங்கள் மற்றும் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு காணியை குத்தகைக்கு வழங்க அரசு கருதியுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது வருடங்கள் (30)(10.10.2023 ஆம் திகதி தொடக்கம் முன்னோக்கியதாக 30 வருடங்கள்)

**வருடாந்த குத்தகை தொகை**.- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் பிரகாரம், 2023 ஆம் ஆண்டில் காணியின் வணிகப் பெறுமதி 4% ஆகும். இந்தக் குத்தகை தொகை எல்லா 05 வருடங்களுக்கும் ஒருமுறை திருத்தம் செய்யப்படல் வேண்டும். அத்துடன் அதனை ஏற்கனவே 05 வருடங்களின் நிறைவில் அறவிடப்பட்ட தொகையில் 50% ஐ விட அதிகரிக்கக் கூடாது.

**தவணைப் பணம்** :- வருடாந்த குத்தகைப் பணத்தின் மூன்று மடங்காகும்;

**தண்டப் பணம்** :- 2023 ஆம் ஆண்டில் காணியில் அபிவிருத்தி செய்யப்படாத வணிகப் பெறுமதியில் 10% பணம்;

(ஆ) குத்தகை பெறுகின்றவர்களின் மூலம் வரி அறவிடுகின்ற நாள் தொடக்கம் 01 வருடத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளரின் விருப்பத்தின் பேரில் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகை பெறுகின்றவர்களின் மூலம் இந்தக் காணி வணிக நடவடிக்கைகளுக்காக அன்றி வேறு எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் ஈடுபடுத்தப்படக் கூடாது;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேடமான கட்டுப்பாடுகளுக்கும் இந்த குத்தகை உள்ளடங்குதல் வேண்டும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டுள்ள/நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களை சிறந்த நிலையில் அபிவிருத்தி செய்து பேணி வரல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகை வழங்கிய சந்தர்ப்பத்தில் பெறுபவர் மூலம் காணியைப் பெற்றுக்கொண்ட நோக்கத்தை உரிய காலத்தில் அடைய முடியாதவிடத்து. குத்தகையை நிறுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) 10.10.2023 ஆந் திகதி தொடக்கம் ஐந்து ஆண்டுகள் கடக்கும் வரை உப குத்தகை அல்லது மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் தொடர்ச்சியாக செலுத்தப்படல் வேண்டும், அத்துடன் குத்தகைப் பணம் செலுத்தாத சந்தர்ப்பங்களின்போது ஒப்பந்தம் இயல்பாகவே நீக்கப்படும். குத்தகையை தொடர்ச்சியாகச் செலுத்தாமல் இருக்கின்ற சந்தர்ப்பமொன்றில் செலுத்தவேண்டிய நிலுவையாகவுள்ள குத்தகை தொகைக்காக 10% தண்டப் பணத்துக்குரிய வட்டி அறவிடப்படும்;

வர்த்தமானியில் அறிவித்தல் விடுக்கப்படும் நாள் தொடக்கம் 06 கிழமைகளுக்குள் உரிய காணியை குத்தகைக்கு வழங்கக் கூடாது என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணங்களை எழுதி எனக்கு சமர்ப்பிக்கத் தவறினால் விண்ணப்பத்தின் பிரகாரம் குத்தகை வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டி. இஷாரா எம் சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 01.

11 - 175

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/70440.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NP/28/04/02/SLO/43/1838.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

வவுனியா மாவட்டம் வவுனியா பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 214 வவுனியா நகரம், வவுனியா கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த நில அளவையியல் திணைக்களத்தின் நிலவரைபடம் F. T. P. 7 இன் துண்டு இலக்கம் 128 இன் 02 றூட், 02 பேர்ச் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித் துண்டினை சங்க நடவடிக்கைகளின் பொருட்டு வவுனியா மாவட்ட கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் இரண்டாவது முறையாகவும் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : பாதை;
கிழக்கு : துண்டு இலக்கம் 129;
தெற்கு : துண்டு இலக்கம் 133;
மேற்கு : துண்டு இலக்கம் 131.

02. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- 30 வருடங்கள் (10.10.2023 - 09.10.2023 ஆம் திகதி வரை);

(அ) **வருடாந்த குத்தகைப் பணம்** .- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2023.10.10 முதல் காணியின் அதிகாரிக்கப்படாத பெறுமதியின் 4% ஆகும்;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் குத்தகையாளரின் மூலம் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரர் இக்காணியினை சங்க நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(உ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 10.10.2023 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்குள் துணைக் குத்தகை செய்ய அனுமதி வழங்கப்படமாட்டாது, இக்காலப் பகுதியின் பின்னர் காணியை பெற்றுக் கொண்ட நோக்கத்தின் பொருட்டு மாத்திரமே துணை குத்தகை செய்யமுடியும்;

(ஏ) குத்தகைப் பணத்தினைத் தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

மேற்படி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. தாருகா மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, ஒற்றோபர் 25.

11 - 215

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/75206.
மாகாணக் காணி ஆணையாளர் இல.: PLC/L2/25/7/29.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், வத்தள பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 171/B, வலகல கிராம அலுவலர்

பிரிவில் மாடாகொட பி. பி. கம். 2606 ஆம் இலக்கமுடைய வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 இல் மீண்டும் பிரித்து ஒதுக்கப்பட்டு வரையப்பட்ட கடத்திரல் வரைபட இலக்கம் 512002 இல் காணித்துண்டு இலக்கம் 09 சுமார் 36 பேர்ச்கள் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தருமாறு கேட்டு ஜ. டபிள்யூ. டபிள்யூ. ஸ்ரீல் என்பிரைசஸ் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 7 மற்றும் 8:
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 7, 8 மற்றும் பிரதேச சபை வீதி;
தெற்கு : பி. பி. கம் 2294 இல் காணித்துண்டு இலக்கம் 41 மற்றும் பி. பி. கம் 4288 இல் காணித்துண்டு இலக்கம் 1;
மேற்கு : பி. பி. கம் 4288 இல் காணித்துண்டு இலக்கம் 1.

குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (24.10.2023 தொடக்கம் முன்னோக்கி)

(ஆ) **வருடாந்தக் தொகை**.- குத்தகை ஆரம்பமாகும் 2023 ஆம் வருடத்தில் வருடத்திற்குமதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப்பெறுமதியில் 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். 2023 ஆம் வருடத்தில் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படும் ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுபட்ட வருடாந்த குத்தகை பணத்திற்கு 20% கூட்டி கொள்ளுதல் வேண்டும். **தவணைக் கட்டணம்**.- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

**தண்டப்பணம்** :- அறவிடப்படமாட்டாது;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திரும்பத்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள பேது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்ச்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 24.10.2023 ஆம் தினத்திலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகை தொடர்ந்து செலுத்தப்படுதல் வேண்டும் செலுத்தப்பட தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே நிறுத்தப்படுவதுடன் தொடர்ந்து குத்தகை செலுத்தப்படாத பட்சத்தில் குத்தகை மிகுதிக்கு 10% அபராதம் விதிக்கப்படும்;

இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்துமானி வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

கே. ஜீ. பி. சௌம்யா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 01.

11 - 216

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.